# உடன்பிறப்பே... 31

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த பெங்களூர் திராவிடமணி அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**



ஓவியம் : ரவி பேலட்

# பெங்களூர் திராவிடமணி
# கர்நாடகாவின் கழக மணி!

*1955-ஆம் ஆண்டு, பிப்ரவரி 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் மைசூர் மாநில தி.மு.க மாநாடு பெங்களூருவில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் சிறப்புரையாற்றிய பேரறிஞர் அண்ணா, அப்போது கணித்துச் சொன்ன அரசியல்தான் இப்போதைய இந்தியாவை அச்சுறுத்தி வருகிறது. அவர் சொல்கிறார்:*

*“வடநாட்டில் என்னதான் ஒற்றுமை கீதம் பாடினாலும், ஒற்றுமையை நிலைக்க வைக்க முடியாது. இந்தியாவிலேயே கடைசி சமரசத் தூதர் பண்டிதர் நேருவாகத்தான் இருக்க முடியும். அவருக்குப்பின் இந்தியத் துணைக்கண்டம் இந்துமத வெறியர்களின் கையில் சிக்கி சீரழியப் போகிறது” என்கிறார்.*

*அத்துடன் வடநாட்டுக்குச் சென்ற அனுபவத்தில், சில காட்சிகளையும் விளக்கியவர், தென்னாடு அதில் எவ்வாறு விளங்குகிறது என்பதையும் எடுத்து வைத்தார்.*

*கர்நாடக மாநிலமாக இருந்தாலும், தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் கழகம் செல்வாக்கு செலுத்தியதை அறிய, அந்த மாநாடு ஒரு மைல்கல்லாக இருந்தது. அந்த மாநாட்டுக்குப் பின்னணியில் உழைத்த உடன்பிறப்புகளில் ஒருவர் பெங்களூர் திராவிடமணி. பெற்றோர் வைத்த பெயர் பூசலிங்கம்.*

## கர்நாடகாவில் கழகம்

*மொழிவாரியாக தமிழ்நாடு நிலப்பகுதிகளில் கழகம் ஆதிக்கம் செலுத்தினாலும், தென்னிந்தியா என இப்போது அறியப்படும் ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில் தமிழர்கள் அதிகம் வசித்த பகுதிகளிலும் கழகத்தின் செல்வாக்கு அப்போது பெரும்வீச்சாக இருந்தது. அண்ணாவின் கருத்துகளால் அங்கும் இளைஞர்கள் ஈர்க்கப் பட்டனர்.*

*சென்னையில் கட்சி தொடங்கப்பட்ட அதே நாளில் கோலார் தங்கவயல், பெங்களூரு ஆகிய பகுதிகளிலும் கிளை அமைப்புகள் தொடங்கப் பட்டுள்ளன. கழகத்தின் தொடக்க கால கட்டமைப்புகளைப் போலவே மாவட்டக் கழகம், வட்டம், நகரம், பகுதி அமைப்புகள் என வலுவான கட்டமைப்புடன் கர்நாடகப் பகுதிகளிலும் கழகம் செயல்படத் தொடங்கி இருந்தது.*

*பொறுப்பாளர்கள் உட்கட்சித் தேர்தல் முறைப்படி தேர்வாகினர். அப்படி வலுவான கட்சிக் கட்டமைப்புடன் செயல் பட்டதால்தான் ஆந்திராவின் சித்தூரிலும், கர்நாடகாவில் பெங்களூருவிலும் மாநாடுகள், கூட்டங்கள் நடத்தப்படும் அளவுக்குக் கழகம் இருந்தது.*

**1958-ஆம் ஆண்டு பெங்களூரு மாநாட்டில் கழகம் கொண்டு வந்த தீர்மானம்தான் கர்நாடக மாநில பெயர் மாற்றம். பின்னர் 1972-ஆம் ஆண்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது.**

*கழகத்தின் செல்வாக்கு, பேரறிஞர் அண்ணாவின் மொழிவாரி மாநில உரிமைகள் குறித்த உரைகள் ஆகியவற்றில் ஈர்க்கப்பட்ட பிறமாநில தமிழ் இளைஞர்களும் கழகத்தின்பால் ஈர்க்கப்பட்டனர்.*

*1935-ஆம் ஆண்டு பிறந்த திராவிடமணி, கர்நாடகாவில் கழகத்தின் செயல்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டபோது அவரது வயது இருபது. அதே தீவிரத்துடன் இயங்கியவர் தனது 23-வது வயதில், கர்நாடக மாநில தி.மு.க.வின் இரண்டாவது மாநில மாநாட்டுக்குச் செயலாளராக நியமிக்கப்படும் அளவுக்கு வளர்ந்தார்.*

## அண்ணா மனதில் இடம்

*1958-ஆம் ஆண்டு, ஏப்ரல் 26 மற்றும் 27 தேதிகளில் பெங்களூரு மாநாட்டுக்கு கழகத்தின் அனைத்து முன்னோடிகளும் திரண்டனர். அதுவரை கர்நாடக மாநிலம் அப்படி ஓர் அரசியல் நிகழ்ச்சியைக் கண்டிருக்கவில்லை. தமிழ், தெலுங்கு, கன்னடம் என மும்மொழிகளிலும் கருத்துரைகள் வழங்கப்பட்ட மாநாடாக அந்த மாநாடு அமைந்தது. அந்த மாநாட்டு மேடையிலேயே கழகச் செயலாளர் நாவலர் திராவிடமணிக்கு பாராட்டுத் தெரிவித்தார்.*

*“கர்நாடகத்தில் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் தோழர்களின் அரிய முயற்சி ஓர் எழில்மிக்க மாநாடாக மலர்ந்திருக்கிறது” என வாழ்த்தினார். மாநாட்டு ஏற்பாடுகளும், கழக முன்னோடிகள் தங்குவதற்கான ஏற்பாடுகளையும் மிகச் சிறப்பாகச் செய்து அண்ணாவின் மனதில் இடம்பெற்ற தம்பியாக இருந்தார். மாநாட்டின் நிறைவாக நன்றியுரை நிகழ்த்தியவர் திராவிடமணி.*

*1960-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் ஆணையாளராக முன்னின்று நடத்திய கழகத் தேர்தலில் கர்நாடக மாநில அமைப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் திராவிடமணி.*

## 62 நாட்கள்... 62 பொருட்கள்...

*தலைமைக் கழகம் அறிவிக்கும் போராட்டங்களை மாநில எல்லைகள் கடந்து மக்கள் போராட்டமாக மாறுகிறது எனில், திராவிடமணி போன்றோரின் பங்களிப்பு இல்லாமல் நிகழ்வதில்லை.*

*1965-ஆம் ஆண்டு கழகம் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தினை முன்னெடுத்தபோது, தமிழ்நாடு மட்டும் முடங்கவில்லை. கர்நாடக மாநிலத்திலும் மாணவர்கள் ஊர்வலம், உண்ணா நோன்பு என இந்தித் திணிப்பைக் கண்டித்து, கழகத்தின் சார்பில் போராட்டங்களை முன்னெடுத்தனர். அதை வழிநடத்திச் சென்றவர் நம் திராவிடமணி.*

*அந்தப் போராட்டத்தின்போது தான் கலைஞர் கைது செய்யப் பட்டு, பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் 62 நாட்கள் அடைக்கப்பட்டிருந்தார். அவர் விடுதலையான பின்னர், பெங்களூர் வரவழைத்து மிகப்பெரிய பொதுக் கூட்டத்தை நடத்தினார் திராவிட மணி. 62 நாட்கள் சிறையில் இருந்ததைக் குறிக்கும் வகையில், 62 பரிசுப் பொருட்களை கலைஞர் அவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தார்.*

*“கர்நாடக மாநிலத்து அன்பு உள்ளங்களின் அருமையான பரிசுப் பொருட்கள், தனிமைச் சிறையிலே உண்டான மனப்புண்ணுக்குத் தடவிய மருந்தாகவே தோன்றின, விருந்தாகவே மகிழ்வூட்டின” என அந்த நிகழ்ச்சியை* ***‘நெஞ்சுக்கு நீதி’*** *முதற்பாகத்தில் குறிப்பிட்டுள்ளார் கலைஞர்.*

## கர்நாடக சட்டசபையில்...

*1960-ஆம் ஆண்டில் கர்நாடக மாநில கழக அமைப்பாளராகச் செயல்படத் தொடங்கிய திராவிடமணி, 1983-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 23 ஆண்டுகள் மாநில அமைப்பாளராக இருந்து கர்நாடக மண்ணில் கழகத்தின் கொள்கைகளைக் கொண்டு சேர்த்தார். பெங்களூர் மாநகராட்சி மன்றத் தேர்தலில் தி.மு.கழகத்தின் சார்பில் நான்கு முறை தேர்வானார். அவர் மாநகராட்சி உறுப்பினராக இருந்தபோது, பெங்களூரு* ***‘கேவல்ரி ரோடு’*** *என்கிற இடத்துக்கு தமிழில்* ***‘கே.காமராசர் சாலை’*** *எனப் பெயர் மாற்றம் செய்து கர்மவீரருக்குப் பெருமை சேர்த்தார்.*

*1967-ஆம் ஆண்டு நம் கழகம் தேர்தலில் வென்று, தமிழ்நாட்டில் ஆட்சியைப் பிடித்தது மட்டுமில்லாமல், கர்நாடகாவிலும் போட்டியிட்டது. அந்த செல்வாக்கு, 1972-ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினராக திராவிடமணியைச் சட்டசபைக்கு அனுப்பி இருந்தது.*

## மாநிலப் பெயருக்கு அண்ணா தீர்மானம்

*கர்நாடக மாநிலத்துக்கு அதற்கு முன் இருந்த பெயர்* ***‘மைசூர் மாநிலம்’***. *1958-ஆம் ஆண்டு நடைபெற்ற கழகத்தின் பெங்களூரு மாநாட்டில்தான்,* ***‘கர்நாடகா’*** *எனப் பெயர் சூட்டப்பட வேண்டும் என அண்ணா தீர்மானம் நிறைவேற்றினார். அந்தத் தீர்மானம் கர்நாடக மக்களிடையே வரவேற்பைப் பெற்றிருந்தது. பிற்பாடு 1972-ஆம் ஆண்டுதான் அப்போதைய முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ் மாநிலத்தின் பெயரை* ***‘கர்நாடகா’*** *என மாற்றினார்.*

*அண்ணாவின் அந்தத் தீர்மானம் நடைமுறைக்கு வந்தபோது, சட்டமன்றத்தில் அதைக் குறிப்பிட்டு வழிமொழிந்தவர் திராவிடமணி. மாநில எல்லைகளைக் கடந்து, கர்நாடகா மாநிலக் கழகத்தின் செயல்பாடுகளை, கன்னடம் பேசும் தலைவர்களுக்கு நிகராக நடத்திக் காட்டியவர் திராவிடமணி.*

*கழகம் நடத்திய கருப்புக் கொடிப் போராட்டம், ஈழ ஆதரவு ரயில் மறியல் போராட்டம் ஆகியவற்றைச் சிறப்பாக வழிநடத்தியவர். தவிர, அந்த மாநிலத்துக்கே உரிய பிரச்சினையான கர்நாடக-மராட்டிய மாநில எல்லைப் பிரச்சினையையொட்டி* ***‘மகாஜன் கமிஷன்’*** *அறிக்கையை நிறைவேற்ற ரயில் மறியல் போராட்டம், விலைவாசி உயர்வு கண்டனப் போராட்டம் எனப் பல போராட்டங்கள் கழகத்தின் சார்பில் நடத்தி, சிறை சென்றவர்.*

*பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரால் அன்பு பாராட்டப்பட்ட திராவிடமணி 1977-ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தால் சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.*

*1982-ஆம் ஆண்டு முதன்முறையாக கழகத்தில் தலைமைச் செயற்குழுப் பொதுக்கூட்டத்தைப் பெங்களூருவில் முன்னின்று நடத்திக் காட்டினார் திராவிட மணி. இடையறாத கழகப் பணிக்காக 2000-வது ஆண்டில் கலைஞர் விருதினை, கலைஞர் கைகளால் பெற்ற உடன்பிறப்பு அவர். எதிர்பாராத விதமாக அடுத்த ஓராண்டில் மறைவெய்தினார். அவரது உழைப்பு கலைஞர் விருதுக்கு என்றும் பெருமை சேர்க்கும்.*

**...துடிக்கும்**

## நினைவு பொன்விழாவில் மக்கள் கலைஞன்!





இந்தித் திரைப்பட உலகில் முற்போக்கான விஷயங்களைப் பேசியவர் பால்ராஜ் சஹானி. இன்றைய பாகிஸ்தானில் உள்ள ராவல்பிண்டியில் பிறந்த இவர், இரவீந்திரநாத் தாகூர், காந்தி போன்றோரிடம் ஆசிரியர், பத்திரிகையாளர் எனப் பல நிலைகளில் பணியாற்றியவர். பிறகு, ஆங்கில இலக்கிய மேதை ஜார்ஜ் ஆர்வெல் உடன் லண்டன் பி.பி.சி. வானொலி நிலையத்திலும் பணியாற்றினார். இந்திய சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்திருந்த காலத்தில் **‘இந்திய மக்கள் நாடக மன்றம்’** எனும் அமைப்பில் இணைந்து முற்போக்கு நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார்.

பிறகு இந்தித் திரைப்பட உலகில் நுழைந்து, வறுமை, வேலையில்லா திண்டாட்டம், ஊழல், தேசப் பிரிவினை போன்ற பிரச்சினைகளைப் பேசிய ‘இன்சாஃப்’, ‘தர்தி கே லால்’, ‘தோ பீகா ஜமீன்’, ‘காபூலிவாலா’, ‘கரம் ஹவா’ உள்ளிட்ட படங்களில் தன் யதார்த்த நடிப்பை வழங்கி, மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தார். 1946 முதல் 1973 வரை 134 படங்களில் நடித்த இவர், 1973 ஏப்ரலில் காலமானார். இந்த ஆண்டு அவருடைய நினைவு பொன்விழா ஆண்டு.

அதை நினைவுபடுத்தும் விதமாக, அவரது வாழ்க்கை, பணி ஆகியவற்றைக் கோடிட்டுக் காட்டும் புத்தகம் ஒன்றை **‘மகத்தான மக்கள் கலைஞன் பால்ராஜ் சஹானி’** என்ற தலைப்பில் எழுதியிருக்கிறார் வழக்கறிஞர் கே.சுப்பிரமணியன். ஒரு திரைப்பட நடிகராக மட்டுமல்லாமல், பத்திரிகையாளர், எழுத்தாளர், நாடக ஆளுமை என சஹானியின் பன்முகத்தையும் அறிந்துகொள்ள உதவுகிறது இந்தப் புத்தகம். இதை கோவை சரோஜினி பதிப்பகம் வெளியிட்டுள்ளது. தமிழ் வாசகர்களுக்கு பால்ராஜ் சஹானியை அறிமுகப் படுத்தும் முதல் நூல் இது என்பது கூடுதல் சிறப்பு.

## :ப்ளாஷ்பேக்



## முத்தத்துக்குப் புத்தகம்!



அப்துல் அலி

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 142 தொல்காப்பிய நூற்பாக் களை மட்டும் எடுத்துக்கொண்டு, 100 தலைப்புகளில் 100 மலர்களாக உரை எழுதினார். பிறர் உரையைக் காட்டிலும் தலைவர் கலைஞரின் உரை மாறுபட்டு இருந்தது. **‘தொல்காப்பியப் பூங்கா’** என்ற அந்த உரை நூல் 2003-ஆம் ஆண்டு வேலூர் மாவட்டத்தில் வெளியிடப்பட்டது. புத்தகத்தைப் பெற்றுக்கொண்டு தலைவர் கலைஞர் அவர்களின் கையைப் பிடித்து முத்தமிட்டேன். அவர் சிரித்துக்கொண்டே எனக்குப் புத்தகத்தை வழங்கினார். அரங்கமே என் செயலைக் கைதட்டி வரவேற்றது.

**-மு.அப்துல் அலி, வட்ட கழகச் செயலாளர், ஆம்பூர்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சபையில் புதிய பாய்ச்சல்

**1957-ஆம் ஆண்டு சட்டசபையில் கழக உறுப்பினர்கள் நுழைந்த பின்னரே, அவை நடவடிக்கைகள் பரபரப்பாகப் பேசப்பட்டன. பேரறிஞர் அண்ணாவும் ஏனைய கழகச் சட்டசபை உறுப்பினர்களும் பேசிய பேச்சுகள் மக்களிடையே புதிய பாய்ச்சலை நிகழ்த்தின. அண்ணா பேச எழுந்தால், அனைவரின் கண்ணும் காதும் அந்தப் பக்கம் திரும்பி விடும். அப்படி அனைவரின் கவனத்தை ஈர்க்கும் விதத்திலும், உள்ளத்தைக் கவர்ந்து, சிந்தனையைத் தூண்டும் முறையிலும் அவரது பேச்சு இருக்கும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 297





எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131